



தமிழினத்தின் பிரச்சினைகளைத் தீர்த்துவைக்க சிறீமாவோ ஒருவரால் மட்டுமே முடியும்.
— பீட்டர் கெனமன்


# சுதந்திரன்
SUTANTIRAN

விலை சதம் 35

வள்ளுவர் ஆண்டு 2007 | ஐப்பசி 18 | துல்கஃசா 10 | (3-11-76) புதன் புத்தகம் 30 இதழ் 56


## பாலஸ்தீன போராட்டத்துக்கு
# போராட்டத்துக்கு
## தமிழர் விடுதலைக் கூட்டணி பூரண ஆதரவு!
## பொய்ப் பிரச்சாரங்களுக்கு அமிர் ஆப்பு!
## புத்தளம் கருத்தரங்கில் விடுதலை முழக்கம்!

தமிழர் விடுதலைக் கூட்டணி பாலஸ்தீனியர்களின் விடுதலைப் போராட்டத்துக்கு எதிரானது என்று அண்மைக்காலமாக திட்டமிட்டு நடந்தப்பட்டுவரும் பொய்ப்பிரசாரத்தை புத்தளத்தில் நடைபெற்ற கருத்தரங்கில் பேசிய தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயல் அதிபர் நாவலர் அ. அமிர்தலிங்கம் கிழித்தெறிந்தார். இன்று நாடற்றவர்களாக— அகதிகளாக்கப்பட்டுள்ள பாலஸ்தீனிய மக்கள் மீண்டும் தமக்கோர் தாயகத்தை அமைத்துக்கொள்ள நடத்திவரும் போராட்டத்துக்கு தமிழர் விடுதலைக் கூட்டணியின் தார்மீக ஆதரவு என்றைக்கும் உண்டு என்று நாவலர் அவர்கள் இக்கருத்தரங்கில் தெட்டத் தெளிவான வார்த்தைகளால் எடுத்துரைத்தார்.

புத்தளம் தமிழ்பேசும் இளைஞர் மன்றத்தின் சார்பில் புத்தளம் விளையாட்டரங்குக் கட்டிடத்தில் நடைபெற்ற கருத்தரங்கில் பேசிய செயலதிபர் நாவலர் அமிர்தலிங்கம் அவர்கள் பின்வருமாறு எடுத்துரைத்தார்:—

"இன்று முஸ்லிம் மக்களும், தமிழர் விடுதலைக் கூட்டணியுடன் இணைந்து போராடுவதில்தான் தங்களுக்கும் மீட்சியென்பதை உணர்ந்துஎம்மை நெருங்கி வருகின்றனர். இது சிங்கள ஏகாதிபத்தியத்துக்கும், அதன் எடுபிடிகளுக்கும் பெரிய கலக்கத்தை ஏற்படுத்திவிட்டது. இதனுல் இந்த ஒற்றுமையை — உறவைப் பிரிக்கவேண்டுமென்றே பாலஸ்தீன அரபுக்களின் விடுதலைக் கோரிக்கைக்கு தமிழர் விடுதலைக் கூட்டணி விரோதமானது என்று திட்டமிட்டு, ஒரு பொய்ப்பிரசாரத்தை நாள்தோறும் சில நாளேடுகளும் நச்சுமனத்தினரும் நடத்திவருகின்றனர். முஸ்லிம்களின் மனதிலே தப்பெண்ணத்தை விதைத்துவருகிறார்கள்.

நான் இங்கிருந்து தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலதிபர் என்ற முறையிலே கூறிக்கொள்ள விரும்புகிறேன் — பாலஸ்தீன மக்கள் மீண்டும் தங்கள் தாயகத்தை அமைத்துக்கொள்ள நடத்துகின்ற போராட்டத்துக்கு தமிழர் விடுதலைக் கூட்டணி என்றுமே விரோதமாக நடந்தது கிடையாது; நடக்கவும் மாட்டாது!

1957ம் ஆண்டிலே இலண்டனில் நடைபெற்ற சர்வதேசப் பாராளுமன்ற மாநாட்டிலே நான் கலந்துகொண்டு பேசியபோது கூறியிருந்ததை இன்று நினைவூட்ட விரும்புகிறேன்.' ஆங்கிலேய ஏகாதிபத்தியம், நாடற்ற யூதர்களுக்கு நாடு அமைத்துக் கொடுக்கிறேன். என்றுகூறி. நாட்டுடனிருந்த பாலஸ்தீனியர்களை நாடற்ற அகதிகளாக்கிவிட்டது' என்று அப்போதே இந்தப் பிரச்சினையை எடுத்துப்பேசியிருக்கிறேன்!

அதன்பின்னர், பாலஸ்தீனிய மக்களின் பிரச்சினையை ஆராய 'கெய்ரோ'வில் காலஞ்சென்ற எகிப்து ஜனதிபதி நாஸர் கூட்டியிருந்த மாநாட்டிலும் நமது உடுவில் பா. உ. திரு. தர்மலிங்கம் கலந்துகொண்டு, நமது கட்சி சார்பில் தனது ஆதரவைத் தெரிவித்திருக்கிறார்.

"இப்படியிருக்கும் போது, பொய்ப்பிரசாரங்கள் மூலம் விடுதலை உணர்வினுல், ஒன்றுபடும் தமிழ்பேசும் மக்களை பிரித்துவிட முடியாது."

"பாலஸ்தீனப் பிரச்சினை உருவானதே — யூதர்கள் பாலஸ்தீனியர்களின் நிலங்களில் குடியேறி அவற்றைத் திட்டமிட்டு அபகரித்ததனுல்தான். இன்று தமிழர்களுக்கும், முஸ்லிம்களுக்கும் சொந்தமான நிலங்கள் இங்கு சிங்களக் குடியேற்றத்தினுல் அபகரிக்கப்பட்டுவருகின்றன. பாலஸ்தீனியர்களின் பிரச்சினையைவிட மோசமான பிரச்சினை எதிர்காலத்தில் தமிழ் பேசும் மக்களை எதிர்நோக்கவிருக்கிறது.

பாலஸ்தீனியர்களாவது அயலிலுள்ள அரபு நாடுகளில் அகதிகளாகத் தப்பிப்பிழைத்து அங்கிருந்துகொண்டு தமது நாட்டை மீட்கப் போராடுகிறார்கள். இங்கு நாமோ எங்கே ஓடுவது? கடலில் விழுந்து இறக்கவேண்டியதுதான்! எனவேதான், அந்தநிலை ஏற்படுவதற்கு முன்பு தமிழ் ஈழத்தைப்பிரித்து அதில் சுதந்திரமான, சாதிமத பிரதேச பேதமற்ற ஆட்சியை அமைக்க நாம் போராடுகிறோம்! இந்தப் போராட்டத்தில் அனைவரும் இணையவேண்டும் நாம் வாழவேண்டுமெனில் நம்மைநாம் ஆளவேண்டும்!"

## 'உப ஆரக்சக' என்றுல் உங்களுக்குப் புரிகிறதா?

அக்டோபர் 1ம் திகதிய அரச வர்த்தமானியில் 'உப ஆரக்சக' பதவி எனும் புதியதோர் சிங்களச் சொல் தமிழில் ஊடுருவியிருப்பதைக் கண்டு துணுக்குற்றவர் பலர். உதவிப் பாதுகாவலர் பதவி என்பதற்கே 'உப ஆரக்சக' பதவி எனத் தமிழிலும் "Upa Arakshaka" என ஆங்கிலத்திலும் குறிப்பிடப்பட்டுள்ளது. இதனை அப்பட்டமான சிங்களத் திணிப்பு என்பதா? அல்லது மொழிச் சிதைவைக் கலப்புச்சொற்கள் மூலம் ஏற்படுத்த நடக்கும் சதி என்பதா? தமிழ் தெரிந்த அமைச்சரின் அமைச்சிலேயே இந்நிலை என்றுல்...?

## தமிழர் விடுதலைக் கூட்டணி பொதுச்சபை கூடுகிறது!

தமிழர் விடுதலைக் கூட்டணியின் பொதுச்சபைக் கூட்டம் யாழ்ப்பாணத்திலுள்ள கூட்டணியின் தலைமைச்செயலகத்தில் 6-11-76 சனிக்கிழமை காலை நடைபெறுகிறது. இன்றைய அரசியல் நிலைமையில் அதிமுக்கிய விடயங்கள் குறித்து பொதுச்சபை பரிசீலனை செய்வதுடன், கூட்டணியின் அமைப்பு முறை பூரணப்படுத்தப்படவுள்ளது.

## சுடர் கலை இலக்கிய மன்ற தொடக்கவிழா

ஈழத்தின் அதிசிறந்த கலை இலக்கிய திங்களிதழான சுடர் வாசகர்கள் கொழும்பில் இன்று மாலை 5-30 மணிக்கு கூடி கலை இலக்கிய மன்றமொன்றை ஆரம்பிக்கிறார்கள். இக்கூட்டம், 51 லோறீஸ் வீதி, பம்பலப்பிட்டி என்னும் முகவரியில் நடைபெறும். சுடர் வாசகர்கள், வாசகிகள் அனைவரும் வரவேற்கப்படுகின்றனர்.

## தொழிற்சங்கக் கருத்தரங்கில் தொண்டமான்

தமிழ் தொழிற்சங்க கூட்டணியின் ஆதரவில் நடைபெறும் முதலாவது கருத்தரங்கு, வெள்ளவத்தை இராமக்கிருஷ்ணர் மிஷன் நூல்நிலைய மண்டபத்தில் எதிர்வரும் 4-11-76 வியாழன் பிற்பகல் 5 மணிக்கு ஆரம்பமாகும். இக்கருத்தரங்கில் முதுபெரும் தொழிற்சங்கவாதியான திரு. சௌ. தொண்டமான் 'இலங்கையில் தொழிற்சங்க இயக்கம்' எனும் தலைப்பின் கீழ் உரையாற்றுகிறார்.

## துரையப்பா வழக்கு நவம்பர் 29வரை ஒத்திவைப்பு!

துரையப்பாகொலைவழக்கு விசாரணையை 29-11-76 வரை ட்ரயல் — அற் — பார் மேல்நீதிமன்றம் ஒத்திவைத்துள்ளது. 1-11-76ல் நீதிமன்றம் கூடிய போது எதிரிகளான இளைஞர்கள் எழுவர் சார்பிலும் சட்டத்தரணிகள் ஆஜராயினர்.

## யாழ் தொகுதி தமிழ் இளைஞர்பேரவை அங்குரார்ப்பணம்!

தமிழ் இளைஞர்பேரவையின் யாழ்ப்பாணத்தொகுதிக் கிளையின் அமைப்புக் கூட்டம் எதிர்வரும் 7-11-76 ஞாயிற்றுக்கிழமை காலை 10மணிக்கு தமிழர் விடுதலைக்கூட்டணியின் தலைமைச் செயலகத்தில் நடைபெறும். இக்கூட்டத்தில் தமிழர் விடுதலைக்கூட்டணியின் செயலதிபர்கள் நாவலர் அ. அமிர்தலிங்கம், உடுப்பிட்டி சிவா, சட்டத்தரணி வி. யோகேஸ்வரன் ஆகியோர் உரையாற்றுவார்கள்.

# உடப்பு முதல் புத்தளம் வரை கூட்டணித் தலைவர்களுக்கு குதூகல வரவேற்பு

தமிழர் விடுதலைக்கூட்டணியின் கொள்கைப் பிரசாரத்துக்காக கடந்த ஞாயிற்றுக்கிழமை (31-10-76) உடப்பு, முந்தல், மதுரங்குளி, புத்தளம் போன்ற பகுதிகளுக்கு சென்றிருந்த தமிழர் விடுதலைக்கூட்டணியின் செயல் அதிபர் நாவலர் அ. அமிர்தலிங்கம் அவர்களுக்கும் திருமதி அமிர்தலிங்கம் அவர்களுக்கும் ஏனைய கூட்டணி, தமிழ் இளைஞர் பேரவை, பிரமுகர்களுக்கும் அப்பகுதி தமிழ், முஸ்லிம் மக்களால் எழுச்சியும், உணர்ச்சியும் நிறைந்த வரவேற்புக்கள் அளிக்கப்பட்டன. 10மணி நேரத்தில் மொத்தம் நான்கு கருத்தரங்குகளில் தலைவர்கள் கலந்துகொண்டு வீரமுழக்கம் செய்த போது, மக்கள் கரவொலியெழுப்பி அதை வரவேற்ற காட்சி கண்கொள்ளாக் காட்சியாக அமைந்திருந்தது.

புத்தளம் பகுதியில் நடைபெற்ற இந்தக் கொள்கைப் பிரசாரத்துக்கு வேண்டிய ஒழுங்குகளை புத்தளம் தமிழ் பேசும் இளைஞர்மன்றம் ஏற்பாடு செய்திருந்தது.

இக்கருத்தரங்குகளில் தமிழர் விடுதலைக்கூட்டணியின்

—4-ம் பக்கம் பார்க்க

## இன்றைய கருத்தரங்கு

தமிழர் விடுதலைக் கூட்டணியின் கொழும்புக்கிளையினர் நடத்தும் வாராந்தக் கருத்தரங்கு இன்று(3-11-76) புதன்கிழமை மாலை, பம்பலப்பிட்டி லோறீஸ் வீதியிலுள்ள 51ம் இலக்க இல்லத்தில் திரு. ஈழவேந்தன் தலைமையில் நடைபெறுகிறது. 'மாவோவின் அரசியல் தத்துவம்' பற்றி தமிழ்ப் பிரமுகர் உரையாற்றுகிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "தமிழ் தேசிய விடுதலைப் போராட்டத்தில் தமிழ் தொழிலாளர்களும் குதிக்கவேண்டும்!"

## மொழிவழித் தொழிற்சங்கங்களின் தொடக்கவிழாவில் கூட்டணி செயல் அதிபர்கள் அறைகூவல்!

**யாழ்ப்பாணத்தில் இரண்டு புதிய மொழிவழித் தொழிற்சங்கள் கடந்த 23-10-76 சனிக்கிழமை காங்கேசன்துறை பட்டினசபை மண்டபத்தில் தொடங்கப்பட்டன. புகைவண்டிப் பகுதி ஊழியர் சங்கத்தின் யாழ்ப்பாணக்கிளையும், காங்கேசன்துறை சீமெந்து கூட்டுத்தாபன தமிழ் ஊழியர் சங்கமுமே அன்று அமைக்கப்பட்ட மொழிவழித் தொழிற்சங்கங்களாகும்.**

23-10-76 சனிக்கிழமை காலை 9 மணிக்கு புகைவண்டிப்பகுதி ஊழியர் சங்கத்தின் யாழ்ப்பாணக்கிளையின் அங்குரார்ப்பணக் கூட்டம் காங்கேசன்துறைப் பட்டின சபையின் சபா மண்டபத்தில் தலைவர் வே. குணரத்தினம் தலைமையில் நிகழ்ந்தது.

'எமது' மொழிவழித் தொழிற்சங்கம் ஆரம்பிக்கப்பட்டு 12 ஆண்டுகளுக்கு மேலாகியும் இன்றுதான் உற்சாகமாக உயிர்த்துடிப்புடன் இயங்கிக்கொண்டிருக்கிறது. தமிழினத்தின் இலட்சியப் பயணத்திற்கு உறுதுணையாகச் சென்றுகொண்டிருக்கும் நாம் இறுதி வெற்றியை அடைந்தே தீருவோம். கிளைச் சங்கங்களை அமைப்பதன் மூலம் எமது இயக்கத்தை ஒரு கட்டுப்பாடான அமைப்புக்குக்கீழ் பரவலாகச் செயற்பட வைக்க முடியும். எமது இலட்சியம் ஈடேற புகைவண்டித் திணைக்கள தமிழ்ப் பேசும் ஊழியர் அனைவரும் எமது சங்கத்தின்கீழ் அணி திரள வேண்டும்.

### செயலதிபர் சிவசிதம்பரம் உரை

"ஈழத்தின் தொழிற்சங்க வரலாற்றைப் புரட்டிப் பார்த்தால் தமிழர்கள் தொழிலாளர் போராட்டங்களில் தம்முயிரையே பலிகொடுத்து நடத்திய இயக்கங்கள் எமக்குத் தெளிவாகும். தொழிலாளர் போராட்டத்தில் உயிர் துறந்த கந்தசாமிக்கு வைத்த சிலையையே தூக்கி எறிந்த வெறியர்களா எமது இனத்தில் போராட்டத்திற்கு கைகொடுக்க முன்வருவார்கள்? சிங்களத் தொழிலாளர்கள் எல்லோரும் தங்கள் தங்கள் அரசியல் கட்சிகளின்கீழ் அணிதிரண்டு செயற்படும்போது மொழிவழி பிரிந்த சங்கங்கள் மட்டும் அரசியலில் இருந்து விலகிச்செல்ல முடியுமா? ஆங்கிலேயனின் ஆட்சியின்கீழ் அனுபவிக்காத கஷ்டங்களை இன்று தமிழன் அனுபவித்துக் கொண்டிருக்கிறான். நெசவடிக்கும் ஆசிரியனுக்கும் சிங்களம் தேவை என்னும் வகுப்புவாதம் தலை தூக்கி நிற்கிறது. சிங்களத்தில் கதைத்தாற்றான் நெசவுத்தறி வேலை செய்யுமா? இவற்றை தமிழ்த் தொழிலாளர்கள் உணர்ந்து மொழி வழி பிரிந்து சங்கங்களின் கீழ் அணிதிரண்டு எமது சுதந்திரத்தை நாமே ஏற்படுத்தும் போராட்டத்தில் பங்காளர்களாக மாறும்படி கேட்டுக்கொள்கிறேன்."

### செயலதிபர் நாவலர் அமிர்தலிங்கம் உரை

"ஈழத்தமிழர்கள் தமது சுதந்திரத்தை நிலை நாட்டும் போராட்டத்தின் உச்சக்கட்டத்தில் நிற்கின்றனர். நாம் நமது நாட்டில் ஒரு பெரும்பான்மை இனம். நாம் ஒரு தனித் தேசிய இனம். நாம் இந்நாட்டில் தனித்துவத்துடன் வாழ்ந்தவர்கள். எங்கள் சுதந்திரத்தை நாம் யாருக்கும் தாரைவார்த்துக் கொடுத்துவிட முடியாது, சிங்களத் தலைவர்கள் செய்து கொண்ட ஒப்பந்தங்கள் கிழித்தெறியப்பட்ட பின்னும் நாம் ஒத்துழைப்புப் பல்லவி பாடிக்கொண்டிருக்கவும் முடியாது.

எங்கள் பகுதி இளைஞர்கள் தங்கள் தங்கள் சொந்த நாட்டிலேயே தகுதி இருந்தும் வேலை பெறமுடியாத நிலையில் அவதிப்பட்டிருக்கும்போது நாம் சிங்களத் தலைவர்களை நம்பி ஏமாற முடியுமா? அகப்பை பிடிக்கும் கை நம் கையாக இருந்தால் இந்த அவல நிலை ஏற்பட முடியாது. நாம் மொழி வழி பிரிந்த சங்கங்களின் அவசியத்தைப் புரிந்து கொண்டிருக்கிறோம். இத்தகைய அமைப்புக்கள் பலப்படுத்தப்பட்டால் எமது விடுதலை இயக்கம் விரைவில் அச்சமின்றிப் போராடும். எமது வருங்கால சந்ததியின் வளமான வாழ்வுக்காக எம்மை முழுமையாக அர்ப்பணித்து பூரண விடுதலையை விரைவில் பெறுவோம். தமிழ்ப்பேசும் தொழிலாளர் யாவரும் மொழிவழி பிரிந்த சங்கங்களில் அணிதிரண்டு வருமாறு அழைப்பு விடுக்கின்றேன்."

### ஈழவேந்தன் பேச்சு

தமிழன் தன் விடுதலையை விரைவில் காணமுடியாவிட்டாலும் தமிழன் ஒரு 'பிரச்சினை'' என்ற தலையிடி இருந்துகொண்டேயிருக்க வேண்டும். தமிழன் ஒரு பிரச்சினையாக இருப்பதே ஒரு பெரிய வெற்றியாகும். தமிழன் வாழவேண்டின் தமிழன் தன்னை ஆளவேண்டும், என்ற இலட்சியக் கோட்பாட்டை மறந்து விடக்கூடாது. எண்ணிக்கையைப் பற்றிச் சிந்தியாமல் எண்ணத்தில் ஏற்றம்பெற்ற இலட்சியத்துக்காகபோராடுவோம். எமது விடுதலை இலட்சியப் புகைவண்டி விரைந்துசென்று தன் சுதந்திர நிலையத்தை அடைய அனைத்துத் தமிழர்களும் பிந்தாமல் வந்து ஏறிக்கொள்ளுங்கள். அப்போதுதான் எமது வண்டி கடுகதியாகச் சென்று குறுகிய நேரத்தில் விடுதலை நிலையத்தை அடையும்.

### சங்கப் பொதுச்செயலாளர் இலிங்கவேலாயுதம்

"நாம் எமது மொழிவழி தொழிற்சங்கங்களைப் பலப்படுத்தி ஒரு கட்டுக்கோப்புக்குள் வைத்திருக்கிறோம். அதற்காகவே எமது புகைவண்டிப்பகுதி ஊழியர் சங்கத்தின் கிளைகளை பரவலாக அமைத்து தமிழ் ஊழியர்களை ஓரணியிற் திரட்டி வருகிறோம். எங்கள் அமைப்புக்களை பயன்படுத்தும்படி எங் தலைவர்களுக்கு அழைப்பு விடுக்கின்றேன்."

யாழ்ப்பாணக்கிளையின் புதிய அலுவலர் ஏகமனதாகத் தெரிவாகினர்கள். விபரம் வருமாறு:—

தலைவர்: திரு. க. நவரத்தினம். துணைத்தலைவர்கள்: சோம. சிவசுப்பிரமணியம், க. தி. சம்பந்தன். செயலாளர்: ச. கோபாலசாமி. துணைச்செயலாளர்: செ. அமிர்தலிங்கம். பொருளாளர்: ச. சோதிநாதன். செயற்குழு உறுப்பினர்கள்: க. அன்னலிங்கம், வே.குமாரசுவாமி, ஆ. யோவான் பிள்ளை, தி. துரைராசா, க. தங்கராசா.

### சீமெந்து கூட்டுத்தாபன ஊழியர் சங்கம்

23-10-75ல் நடைபெற்ற இலங்கை சீமெந்து கூட்டுத்தாபன ஊழியர் மன்ற அங்குரார்ப்பணக் கூட்டத்திலும் தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயல் அதிபர்களான நாவலர் அ. அமிர்தலிங்கம், மு. சிவசிதம்பரம், மு. ஆலாலசுந்தரம், ஈழவேந்தன் ஆகியோர் உரையாற்றினர் இக்கூட்டத்திற்கு அரசாங்க எழுதுவினைஞர் சங்க பொதுச் செயலாளர் இ. பேரின்பநாயகம் தலைமை வகித்தார்.

பின்வருவோர் நடப்பு வருட நிர்வாகிகளாகத் தெரிவு செய்யப்பட்டனர்:—

தலைவர்: ஆ. சி. கந்தையா. பொதுச்செயலாளர்: கு. கமலநாதன். பொருளாளர்: அ. நித்தியானந்தம். கணக்காய்வாளர்: திரு. மரியநாயகம், துணைத்தலைவர்: திரு. பாலசுப்பிரமணியம். துணைச்செயலாளர்: திரு. சிவசுப்பிரமணியம். அமைப்பாளர்: ச. ம. தவராசா.

---

# பேலியகொடை சைவாலயத்தில் சிங்களமொழியில் நிர்வாகமா?

பேலியகொடை கண்டி வீதியில் அமைந்துள்ள ஸ்ரீ பூபால விநாயகர் ஆலயத்தின் நிர்வாகம் சிங்களத்தில் தான் நடைபெறுகிறதா? இப்படி அங்குள்ள சைவத் தமிழ் இளைஞர்கள் மத்தியில் கேள்வி எழுந்துள்ளது.

ஆலயத்தில் சென்றவாரம் நடைபெற்ற வருடாந்த கந்தஷஷ்டி விழாவுக்கான அறிவித்தல் பிரசுரங்கள் சிங்களத்தில் மாத்திரம் அச்சிடப்பட்டு விநியோகிக்கப் பட்டுள்ளன. இந்தப் பிரசுரங்களை பெற்றுக்கொண்ட சைவத்தமிழ் இளைஞர்கள் பலர், மேற்படி ஆலயத்தில் திடீரென தனிச்சிங்கள நிர்வாகம் ஏற்படக் காரணம் என்ன என்பதை அறிவதில் ஆர்வங்காட்டி வருகின்றனராம்.

இது சம்பந்தமாக தமிழ் இளைஞர்கள் சிலர் ஆலய அர்ச்சகர் ஒருவருடன் தொடர்புகொண்டு விளக்கம் கேட்டபோது "தமிழிலும் வெளியிட ஆவனசெய்யப்படும்'' எனக் கூறி தட்டிக்கழிக்கப்பட்டதாகவும் கூறப்படுகிறது.

பூவுலிங்கம் இராமநாதன் செட்டியார் என்ற சமூக சேவையாளர் ஒருவரால் கட்டப்பட்ட மேற்படி ஆலயத்தில்,தற்போது அர்ச்சகர்களாக இருப்பவர்களில் ஒருவர் சிங்களத்திற்கு ஆலவட்டம் பிடிப்பதில் மும்முரமாக ஈடுபட்டுள்ளாராம் என்ற சந்தேகம் எழுந்துள்ளது.

(1) சில வருடங்களுக்கு முன்னர் நடைபெற்ற கும்பாபிஷேகத் திருவிழாவின் போது சிங்கள ஏகாதிபத்திய வால்பிடியான குமார சூரியருக்கு வரவேற்பு அளித்தமை.

(2) ஆலய விளம்பரப் பெயர்ப்பலகையில் சிங்களத்திற்கு முதலிடம்கொடுத்துத் தமிழை இரண்டாந்தர மொழியாக இழிவு படுத்தியுள்ளமை.

(3) பெயர்ப் பலகையின் வர்ணம் திடீரென நீலநிறமாக மாற்றப்பட்டமை, போன்ற நடவடிக்கைகள் இந்த சந்தேகத்தை எழுப்பியுள்ளது.

மேற்படி ஆலயத்தில் நடைபெற்றுவரும் சைவத் திருமுறை ஓதல், கூட்டு வழிபாடு போன்றவற்றிற்கு குறிப்பிட்ட அர்ச்சகர் இடையூறாக இருந்து வருவதாகவும் இளைஞர்கள் மத்தியில் புகார் கூறப்பட்டு வருகிறது.

இந்தக் கைங்கரியங்கள் தொடர்ந்தும் நடைபெறுமானால், ஆலயத்தில் நடைபெறும் திருவிழா நிகழ்ச்சிகளை தாம் பகிஷ்கரிக்க எண்ணியுள்ளதாக அந்த சைவத் தமிழ் இளைஞர்கள் பலரும் நமது நிருபரிடம் தெரிவித்தனர்.

தற்போது கொழும்பில் உள்ள ஒரு சில [illegible]லயங்கள், ஆட்சியாளர்களைப் புகழ்ந்து அறிக்கைகள் விடுவதிலும், ஆட்சியாளர்கள் நடாத்தும் அரசியல் பாராட்டுக் கூட்டங்களில் கலந்து அரசாங்கத்தையும், அமைச்சர்களையும் புகழ்ந்து, புழுகிப் பாராட்டுத் தெரிவித்து வருவது குறித்தும், சைவத் தமிழ் இளைஞர்கள் பலர் கொதிப்படைந்துள்ளனர்.

---

## திருமண அழைப்பிதழ்

பேரன்புடையீர்!

நிகழும் மங்களகரமான நள வருடம் ஐப்பசி திங்கள் 19ம் நாள் (4-11-76) வியாழக்கிழமை மாலை 6-00 மணி முதல் 8-00 மணிக்குள் வரும் சுபமுகூர்த்த நல்வேளையில்,

எமது புத்திரன் திருநிறை செல்வன் சதானந்தன் அவர்களுக்கும் (கணக்காய்வாளர் திணைக்களம், இலங்கை விமான சேவை)

எமது புத்திரி திருநிறை செல்வி டெய்சிகாதேவி அவர்களுக்கும்

திருமணம் செய்யப் பெரியோர்களால் நிச்சயிக்கப்பட்டு இணுவில் கந்தசாமி கோவிலில் நடைபெறும் திருமண வைபவத்திற்குத் தாங்கள் தங்கள் சுற்றம்சூழ வருகைதந்து மணமக்களை ஆசீர்வதித்துத் தொடர்ந்து மணமகன் இல்லத்தில் 5-11-76 மாலை 4-00 மணி தொடக்கம 7-00 மணி வரை நடைபெறும் உபசரணைகளிலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

தங்கள் நல்வரவை நாடும்

ச. முத்துலிங்கமும் பாரியாரும்
(முன்னாள் ஊராட்சிமன்றத் தலைவர்)
உடுவில்.
ஸ்ரீகந்த வாசம்,
இணுவில்.

க. லோகநாதனும் பாரியாரும்
(ஓவசியர் பெருந்தெருக்கள் திணைக்களம்)
இணுவில் கிழக்கு.
இணுவில்.

(தனிப்பட்ட அழைப்பிதழ்கள் இல்லை)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ‘பாராளுமன்றத்துக்குச் செல்வபன் மட்டும்தான் அரசியல் வாதியல்ல!’

## அராலி கருத்தரங்கில் அமிர்தலிங்கம்!

**கடந்த தீபாவளித் திருநாளன்று (22-10-76) அராலி தெற்கு களவத்துறை வைரவ ஆலய முன்றலில் தமிழர் விடுதலைக் கூட்டணியின் கருத்தரங்கு ஒன்று இளைப்பாறிய ஆசிரியர் திரு. க. நமசிவாயம் தலைமையில் நடைபெற்றது இக்கருத்தரங்கில், கூட்டணித்தலைவர்களும், தமிழ் இளைஞர்பேரவை தமிழ் மகளிர்பேர்வை பிரமுகர்களும் கொள்கை விளக்கமளித்தனர்.**

இக்கருத்தரங்கில் தமிழர் விடுதலைக் கூட்டணியின் கொழும்புக்கிளைத் தலைவர் திரு. ஈழவேந்தன் பேசுகையில கூறியதாவது:-

“தமிழ் மக்களுக்குள்ள அரசியல் நோயை நன்கு அறிந்து அதை மாற்றும் வழி அறிந்தவர்களே நம் தமிழத் தலைவர்கள். “நோய்நாடி நோய்முதல்நாடி அது தணிக்கும் வாய்நாடி வாய்ப்பச் செயல்” என்று திருவள்ளுவர் கூறினர். இந்த நோயை முற்ருக மாற்றுவற்கு உள்ள ஒரே மருந்து தமிழ்மக்கள் தங்கள் தாயகத்தை மீட்டுத் தங்கள் ஆட்சியை நிலைநாட்டுவதுதான். இதற்குத் தமிழ் மக்களிடத்திலே தியாக உணர்ச்சி வளரவேண்டும். ஒருசிலர் அடி உதை வாங்கி, சிறைச்சாலைகளுக்குப் போய் சுதந்திரத்தைஎப்படியாவது வாங்கிக்கொள்ளட்டும் அதுவரை நாம் சுகமாக இருந்துவிட்டு சுதந்திரத்தை அனுபவிப்போம் என்று இருக்கும் வஞ்சக எண்ணம் ஒழியவேண்டும். வாழ்விலும் தாழ்விலும் ஒரே வகையாகப் பங்குகொள்ளும் மனப்பான்மை வளரவேண்டும் கல்யாணவீட்டில் சாப்பிட்டுவிட்டு அதேவீட்டில் நடக்கும் மரணச்சடங்கில் கலந்துகொண்டு அனுதாபம் தெரிவிக்கத் தயங்கும் கயமை ஒழியவேண்டும். இதுவரை காலமும் தமிழ் மக்களின் பிரச்சினைகளை ஒருசில குடும்பங்களின் பிரச்சினையாக எண்ணி தமது சொந்த நலத்தைப் பார்த்துக்கொண்டு வாழ்ந்தவர்கள் இன்று தமது பிள்ளைகளுக்கு பல்கலைக்கழகத்தில் இடம் கிடைக்கவில்லை என்றவுடன் “காசி ஆனந்தன் ஏன் கைதுசெய்யப்பட்டார்?” என்று கேட்கிருர்கள். தமிழ்த் தலைவர்களின் குரல்களுக்கு முன்பே இவர்கள் மதிப்பளித்திருந்தால் இப்படியொரு நிலை இப்போது வந்திருக்குமா? ஒவ்வொரு [illegible] சிந்தித்துப் பார்க்கவேண்டியது இது” என்ருர்.

அடுத்து திருமதி மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம் பேசுகையில்! “சிங்கள இனம் தமிழினமாகிய எம்மையும் சேர்த்துக்கொண்டு நட்பாக வாழு என்று நம்பியகாலம் மலை ஏறிவிட்டது. இந்த உண்மையை நம் தலைவர்கள் உணர்ந்துகொண்டதால் தான் இன்று தாயகத்தின் விடுதலை கோரிப்போராட்டத்தில் இறங்கியிருக்கிருர்கள். இவர்களுக்குப் பக்கபலமாக நின்று உதவிசெய்ய வேண்டியது ஒவ்வொரு தமிழ்மகனினதும், தமிழ்ப் பெண்ணினதும் கடமை ஆகும். இன்று சொந்த நாட்டில் வாழ்ந்துகொண்டிருக்கின்ற தமிழ் மக்களில் ஒரு பகுதியினர் பிரச்சினைகளை உணராதவர்களாக இருக்கிருர்கள். ஆனல் சிங்கள மக்களோடு வாழவேண்டிய நிலையிலிருக்கின்ற தமிழ்மக்களோ தமக்குத் தாயகம் வேண்டும் என்பதை உணர்ந்து அதற்காகப்போராடத் தயாராகி விட்டனர். அவர்களே சுதந்திரத்தின் அவசியத்தை உணர்ந்துகொண்டுள்ளார்கள். ‘பங்களா தேஷ்’ விடுதலைபெற்றதென்ருல் அதற்கு யாரோ விடுதலையைப்பெட்டியில் போட்டுத் தூக்கிக்கொண்டுவந்து கொடுக்கவில்லை. அங்கு வாழ்ந்த அரசியல் தலைவர்கள், இளைஞர்கள், பெண்கள் ஆகிய எல்லோரும் தங்கள் உயிர்களை அர்ப்பணித்துத் துணிவோடு போராடிய காரணத்தால்தான் ‘பங்களா தேஷ்’ விடுதலை பெற்றது. இளைஞர்களின் கைகளில் தான் விடுதலைப்போராட்டம் தங்கியிருக்கிறது. தலைவர்கள் காட்டுகின்ற பாதையில் இளைஞர்கள் செல்ல வேண்டும். பொறுமையோடு அதே வேளையில் துடிப்போடு இருந்து தலைவர்கள் கட்டளையிடுகிறபோது அவற்றைச் செயற்படுத்த முன்வர வேண்டும்” என்று குறிப்பிட்டார்.

“பின்னர் தளபதி நாவலர் அ. அமிர்தலிங்கம் அவர்கள் பேசுகையில் கூறியதாவது:

“அரசியல் வாதி என்ருல் பாராளுமன்றக் கதிரைக்குப் போட்டியிடுபவராகத்தான் இருக்கவேண்டுமென்ற தவருன கருத்து தமிழ் மக்களிடையில் பரவி இருப்பதால் தான் நாங்கள் கூறுகின்ற எல்லாவற்றையும் பாராளுமன்றக் கண்ணேட்டத்தோடு பார்க்கிருர்கள். இந்தத் தவருன பார்வையினல் தான் தமிழினத்தின் விடுதலைப்போராட்டம் தடைப்பட்டு வந்திருக்கிறது. பாராளுமன்றத்தேர்தல் நமது விடுதலைப்போராட்டமல்ல; அது போராட்டத்தின் சிறுபகுதி.

“தமிழர் விடுதலைக்கூட்டணி பாராளுமன்றத்தேர்தலுக்கு நிற்பதற்கு மூன்றே மூன்று காரணங்கள் மட்டுமே உண்டு. (1) எமது தாய் நாட்டை அமைப்பதற்கு எமது தமிழ் மக்கள் மத்தியில் உள்ள ஆதரவை உலக அரங்கிற்கு வெளிப்படுத்துவது. (2) தமிழினத்தை அடிமைப்படுகுழிக்குள் தள்ளிக்கொண்டே அதன்மூலம் தமது சுயநலத்தைக் காப்பாற்றிக்கொண்டிருக்கும் துரோகிகளைப் பாராளுமன்றம் செல்லவிடாமல் தடுப்பது. (3) பாராளுமன்றத்தை எமது விடுதலைப்போராட்டத்தின் ஒரு பிரசாரமேடையாகப் பயன்படுத்துவது.

“இன்று இந்தக் கருத்தரங்கிற்குத் தலைமை வகிக்கும் எனது அன்புக்குரிய இளைப்பாறிய ஆசிரியர் நமசிவாயம் அவர்கள் மறுமுறை பாராளுமன்றத்தேர்தலில் நான் போட்டியிடுவனகவே இருக்கவேண்டும் என்று வற்புறுத்தித் தம் தலைமையுரையை ஆற்றினர். இவரைப்போலவே வேறுபல பெரியார்களும், இளைஞர்களும் என்மீது கொண்டுள்ள தனிப்பட்ட அன்பு காரணமாகவோ என்னவோ மறுமுறை நான் பாராளுமன்றத் தேர்தலில் நிற்க வேண்டுமென்று கேட்டிருக்கிருர்கள். இவர்களுக்கெல்லாம் நான் ஒன்றைமட்டும் கூறிவைக்க விரும்புகிறேன். எங்கள் தலைவர் தந்தை செல்வா அவர்கள் எனக்கு என்ன கட்டளை இடுவாரோ அதையே நான் செய்வேன். “இன்று தம்மை ‘மக்கள் பிரதிநிதிகள் என்று அழைத்துக்கொள்கின்ற சிலர் மக்கள் மத்தியில் பொலிஸ் பாதுகாப்போடுதான் உலாவுகிருர்கள். தமிழ் மக்களின் வாக்குகளைப் பெற்றுப் பிரதிநிதியாகியவர்கள் சிங்களப் பொலிசாரின் துணையோடு தான் தமிழர்கள் மத்தியில் நடமாடுகிருர்கள். ஆனல் எமக்கோ பொலிஸ் பாதுகாப்பும் கிடையாது இராணுவத்தின் துணையும்வராது. எமக்கு தமிழ் மக்கள்தான் பாதுகாப்பு தருகிருர்கள். துப்பாக்கி ஏந்திய பொலிஸ்காரர்களைப் பக்கத்தில்வைத்துக்கொண்டு கொள்கை பேசுபவர்கள் நாமல்ல. தள்ளாடும் உடலையுடைய தந்தை செல்வாவின் தலைமையிலே தனியாக நின்று தமிழ்மக்கள் மத்தியில் கொள்கை பேசுபவர்கள் நாங்கள்.

“தமிழ் மாணவர்களுக்கு உயர்தரக் கல்வி போதித்து வந்த சிறந்த கல்லூரிகளைப் பல்கலைக்கழக வளாகமாக்கி அதில் பெரும் பங்கினராகச் சிங்கள மாணவர்களைக் கொண்டுவந்து சேர்த்துவிட்டு தமிழ் மக்களுக்கும் பெற்ருேர்களுக்கும் பெருந்துரோகம் இழைத்ததில் மக்கள்பிரதிநிதிகள் என்றுகூறிக் கொள்ளும் இனத்துரோகிகளுக்குக் கணிசமான பங்கு இருக்கிறது. இப்படித் தமிழ் மாணவர்களின் உயர் கல்விக்கு உலைவைத்தவர்கள் தான் இப்போது பள்ளிக்கூடங்கள் கட்டித்தருவதாகக் கூறிப் பாசாங்கு செய்கிருர்கள். இந்தப் பள்ளிக்கூடங்களை எதற்குக் கட்டுகிருர்கள்? இந்தப் பள்ளிக்கூடங்களில் படித்துவிட்டு மேற்படிப்புக்கு பல்கலைக்கழகங்களுக்குத் தமிழ் மாணவர்கள் செல்லக்கூடியதாக இருக்கின்றதா? தமிழ் மக்கள் இவற்றைச் சிந்திக்க வேண்டும்.

“இன்று தமிழ்நாட்டில் உள்ள பல்கலைக்கழக வளாகத்தில் படிப்பதற்குத்தான் தமிழ் மாணவர்களுக்கு உரிமை மறுக்கப்பட்டாலும் அங்கே காவல்வேலை செய்வதற்குக்கூட இடமில்லை. அங்கே காவலாளிகளாக நிறுத்தப்பட்டிருப்பவர்கள் சிங்கள நாட்டிலிருந்து கொண்டுவரப்பட்ட சிங்கள இளைஞர்கள். ‘உங்களுக்கு வேலை தருகிறேம்’ என்று கூறி தமிழ் இளைஞர்களைத் தங்கள் பக்கமாகத் திருப்ப முயலுகின்ற அரசாங்க எடுபிடிகள் தமிழ் மண்ணில் தமிழனுக்கு காவலாளிவேலை எடுத்துக்கொடுக்க முடியாதவர்களாக இருக்கிருர்கள். இப்படிப்பட்டவர்களை இன்னுமா இளைஞர்கள் நம்பப் போகிருர்கள்? இளைஞர்கள் ஒன்றை நிச்சயித்துக் கொள்ளவேண்டும். தமக்கும் தமது இனத்துக்கும் எது விமோசனம் அளிக்கும் பாதை என்பதை அறிந்துகொள்ளவேண்டும்.

“தூரத்தில் இருந்துகொண்டு இயக்கத்தையும், தலைவர்களையும் குறைகூறிக் கொண்டிருப்பதால் பயன் கிடைக்காது. ஒவ்வொரு இளைஞனும் ‘இந்த இயக்கத்துக்கு நான் என்ன செய்தேன்?’ என்று தன்னைக் கேட்டுக்கொள்ள வேண்டும். தன்னல் முடிந்த அளவில் பாடுபட முன்வரவேண்டும். தமிழினம் என்ற உடம்பில் தமிழர் விடுதலை முன்னணிதான் மூளை, தமிழ் மகளிர் பேரவை தான் இதயம், தமிழ் இளைஞர் பேரவைதான் வலிமை. எனவே தான் இளைஞர்கள் போராட முன்வரவேண்டும் என்று அழைக்கிறேம். பத்தாயிரம் இளைஞர் இராணுவ கட்டுக்கோப்புடன்போராட முன்வந்தால் நாம் விரும்பும் தமிழ்ஈழம் தூரத்தில் இல்லை.” என்று முழக்கமிட்டார்.

கருத்தரங்கின் இறுதியில் அராலி தெற்கு — கிழக்குப் பகுதிகளுக்கான தமிழ் இளைஞர் பேரவைக்கிளையொன்று வட்டுக்கோட்டை மத்திய கிளைச் செயலாளர் திரு. த. இராசலிங்கத்தினல் ஆரம்பித்துவைக்கப்பட்டது. தலைவர்: திரு. ம. பன்னீர்ச்செல்வன். துணைத்தலைவர்: திரு. த. வயித்திலிங்கம். செயலாளர்: திரு. ந. சிவகுணநாதன். துணைச்செயலாளர்: இ. பத்மராசா. பொருளாளர்: கு. நவரத்தினம். பன்னிரண்டு பேரைக்கொண்ட செயற் குழுவொன்றும் தெரிவுசெய்யப்பட்டது.

---

## தமிழர் கூட்டணிப் பா. உ.க்கள் சொல்லைச் செயலில் காட்டவேண்டும்!

—அன்ரன்

வெறும் வாய்ப்பேச்சளவுடன் நில்லாது பாராளுமன்றப் பதவிகளை உதறித் தள்ள கூட்டணி பா. உ.க்கள் வரவேண்டும். குறுகிய அடிப்படையில் போராடி நாம் தமிழ் ஈழத்தை அடைந்து விடமுடியாது. பிரதேச வேறுபாடற்ற ஒரு அமைப்பின் கீழ்த்தான் நாம் தமிழ் ஈழத்தை அடைய முடியும். தமிழர் விடுதலைக் கூட்டணியில் மாவட்ட ரீதியிலான குறுகிய அமைப்புகளுக்கு இடம்கிடையாது” என்ருர். மட்டக்களப்புத் தொகுதியின் தமிழ் இளைஞர் பேரவை அமைப்பாளர் திரு. கா. அன்ரன்.

சித்தாண்டித் தமிழ் இளைஞர் பேரவைக்கிளையின் சார்பில் சித்தாண்டி திருமுருகன் கோவில்முன்றலில் உண்ணுநோன்பினை அடுத்து இடம்பெற்ற கருத்தரங்கின் போதே திரு. அன்ரன் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். மேற்படி உண்ணுநோன்பும், கருத்தரங்கும் 25-10-76 திங்கட்கிழமையன்று இடம் பெற்றது.

திரு. செ. வேல்வேந்தன் தலைமையில் இடம்பெற்ற கருத்தரங்கில் திரு. இரா. அம்பலவாணர் உரையாற்றும் போது, “தமிழர்களுடைய போராட்டங்கள் உச்சக் கட்டத்தை அடையும் போது பேச்சுவார்த்தையென்றும், ஒப்பந்தமென்றும் கூறி திசை திருப்பப் பார்க்கின்றது அரசாங்கம். இவற்றை நம்பி தமிழ்மக்கள் ஏமாந்துவிடக்கூடாது. தமிழர் விடுதலைக்கூட்டணி காட்டுகின்ற பாதையிற்சென்று தமிழ் ஈழத்தை அமைப்பதன் மூலமே நாம் சுபீட்சமாக வாழமுடியும்” என்ருர்.

திரு. வ. ஆ. தங்கவேலாயுதம் உரையாற்றுகையில் “சிங்களக் கட்சிகளுக்கு வால்பிடிப்பவர்கள் த. வி. கூ. யாழ்ப்பாணத்தானின் இயக்கமென்று கூறி தமிழ் மக்களிடையே பிரிவினையை ஏற்படுத்தப் பார்க்கின்ருர்கள். மாற்றுக்கட்சிகளில் இருப்பவர்கள் மட்டுமன்றி, மாவட்டரீதியில் இயங்குகிற ஒரு சிலரும் யாழ்ப்பாணத்தான் — மட்டக்களப்பான் என்ற பிரதேச வேறுபாட்டை வளர்க்கப்பார்கின்ருர்கள். இவர்கள் விடயங்களில் நீங்கள் ஏமாந்துவிடக்கூடாது” என்ருர்.

பட்டிருப்புத்தொகுதி த. வி. கூ. பிரமுகர் திரு. பூ. கணேசலிங்கம் “பேச்சுவார்த்தைபற்றிச் சிந்திப்பவர்கள் முதலில்விசாரணையின்றி சிறைவைக்கப் பட்டிருக்கும் தமிழ் இளைஞர்களை விடுதலை செய்ய முன்வரவேண்டும்” என்ருர். “நாம் எமது லட்சியத்தை அடையவேண்டுமானல் இளைஞர்கள் தீவிரமான போராட்டங்களில் ஈடுபட முன்வரவேண்டும்” எனவும் கேட்டுக்கொண்டார்.

மற்றும் திருவாளர்கள் கணேசபிள்ளை, சிவசுப்பிரமணியம், பி. சிவலிங்கம், பொன் தவநாயகம் ஆகியோரும் கருத்தரங்கில் உரையாற்றினர்கள். பொன். தவநாயகம் அவர்கள் இளநீர் வழங்கி உண்ணுநோன்பினை முடித்து வைத்தார்கள்.


சிக்கன சலவைக்கு
கூடுதல் நீலம் கலந்த
**மில்க்வைற் சலவைப் பவுடர்**
பாவியுங்கள்.
1. இரு. பைக. 3-50 சதம் மட்டுமே
**மில்க்வைற் சவர்க்காரத் தொழிலகம், யாழ்ப்பாணம்.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைமைத் தபால் நிலையத்தில் செய்திப் பத்திரிகையாகப் பதிவுசெய்யப்பட்டது

சுதந்திரன்
SUTANTIRAN

# ‘இளைஞர்கள் வழி நடத்தட்டும் தலைவர்கள் பின் தொடரட்டும்!’

## வெருகலில் இராசதுரை பேச்சு!

மட்டக்களப்பு தேசிய பேரவை உறுப்பினர் திரு. செ. ராசதுரை தலைமையில் உகந்தை முருகன் ஆலயத்திலிருந்து கடந்த 9ம் திகதி ஆரம்பிக்கப்பட்ட பாத யாத்திரை கடந்த 27ம் திகதியன்று மூதூர் வெருகலம்பதி ஆலயத்தை வந்தடைந்தபோது மூதூர், திருக்கோணமலையைச் சேர்ந்த தொண்டர்களும் தலைவர்களும் மாபெரும் வரவேற்பொன்றினை அளித்தனர்.

ஈச்சிலம்பத்தை கிராம சபைத் தலைவர் திரு. ஞானகணேசன் தலைமையில் திரு. இராசதுரை உரையாற்றிய போது... “தமிழர்கள் தமது அடிப்படை உரிமைகளை வென்றெடுக்க வேண்டுமானால் தீவிரமான உணர்வுடன் கட்டுக்கோப்பான ஒரு அணியில் தலைவர்கள் முன் செல்ல இளைஞர்கள் வழி நடத்தவேண்டும்”— எனக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் பேசுகையில் “ஒப்பந்த முறைகள் நமக்குக் கற்பித்த பாடங்கள் எங்களைப் பொறுத்த வரையில் புதிய உத்வேகத்தினையும், உணர்வுகளையும் தூண்டியுள்ளன. தமிழன் ஏமாறிய காலம் மலையேறி விட்டது. எம்மைப் பொறுத்தவரையில் ஒப்பந்தங்களும், பேச்சுவார்த்தைகளும் நமது செயற்றிட்டங்களுக்கு தடைக்கல்லாகவே அமையும்.” எனக் குறிப்பிட்டார்.

இவரைத் தொடர்ந்து பேசிய முன்னைநாள் மேலவை உறுப்பினர் செனட்டர் மாணிக்கம் பேசும்போது...

“நாம் பிரிவினை கேட்கவில்லை! நாம் வாழ்ந்த நமது பாரம்பரிய உரிமையான நமது பிரதேசத்தினையே கேட்கிறோம். நிச்சயம் இந்த நாட்டின் சொந்தக்காரன் தமிழன்தான். நாம்யாருக்கும் அடிமைகளல்ல. வியாபாரத்திற்கு வந்த போர்த்துக்கேயர் தொடக்கம் நாடு பிடிக்கவந்த பிரிட்டிஷ்காரன்வரை நமது பிரதேசத்தில் ஆதிக்கம் செலுத்தி இன்று சிங்களவர்களுக்கு தாரை வார்த்துக்கொடு[illegible]தற்கு நாம் எவ்வகையிலும் ஜவாப்தாரிகளல்ல!”- எனப் பலத்த கரகோஷங்களுக்கு மத்தியில் குறிப்பிட்டார்.

இக் கூட்டத்தில் தொண்டர்களோடு தொண்டர்களாக யாத்திரை மேற்கொண்ட சட்டத்தரணி திரு. சாம் தம்பிமுத்து மற்றும் கலா தம்பிமுத்து ஆகியோர் தக்க ஆதாரங்களுடன் இன்றைய ஆட்சிபீடத்தினர் நடத்துகின்ற அநீதிகளையும், அக்கிரமங்களையும் சுட்டிக்காட்டினர்.

அடுத்து மூதூர் உறுப்பினர் திரு. தங்கத்துரை பேசுகையில்... “பட்டி தொட்டியெங்கும் வாழுகின்ற மக்கள் மத்தியில் விடுதலைக் கூட்டணியின் தியாக நோக்கங்களை பரப்புவதற்காகவே இந்த கிராம யாத்திரை மேற்கொள்ளப்பட்டது” —என்று குறிப்பிட்டார்.

(தகவல்; திருமலை-ரத்தினம்)

# சூரியரின் அதிகாரத் திமிருக்கு அப்பாவித் தொழிலாளி பலி!

கதிரைமலை என்ற யாழ் நகரைச்சேர்ந்த தபால்தந்திப் பொறியியல் ஊழியர் தமிழர் விடுதலைக் கூட்டணி அபிமானி என்ற ஒரே காரணத்திற்காகப் பழிவாங்கப் பட்டுள்ளார். சமீபத்தில் சண்டிலிப்பாயில் நிகழ்ந்த கூட்டணி கருத்தரங்கு ஒன்றில் தமிழர் விடுதலைக் கூட்டணியினர் பேசுவதை குழப்பவெனத் திட்டமிட்ட சிலரை அதைச் செய்ய விடாது தடுத்ததொன்றே இவ் அப்பாவித் தொழிலாளி செய்த குற்றமெனப் பேசப் படுகிறது. கூட்டத்தைக் குழப்பவந்த தறுதலைகள் உடுவில் உக்கிப்போன சுதந்திரக்கட்சி அமைப்பாளர் [illegible]னேதனிடம் இவ் ஊழியர் ப[illegible]றி முறையிட்டதாகவும் —அவர் தபால்தந்தி அமைச்சருக்கு வழங்கிய ஆலோசனையின் பேரில் இத்தொழிலாளியை அமைச்சர் அழைத்து “நீ சிங்களவருடன் சிறிதுகாலம் சீவித்துப் பார்” என்ற அறிவுரையுடன் அவரை மாத்தறைக்கு இடமாற்றம் செய்ததாகவும் அறியப்படுகிறது. விசாரணை எதுவுமே மேற்கொள்ளப் படாதது கவனத்திற்குரியது.

மேலும் இது தொடர்பாக சிறிலங்கா என்ஜினியரிங் பொது ஊழியர்சங்க யாழ் கிளை தொழிற்சங்க நடவடிக்கையில் இறங்க உத்தேசித்து தலைமைச் சங்கத்தினருடன் தொடர்புகொண்டபோது குறிப்பிட்ட உறுப்பினர் தமிழரசுக்கட்சியைச் சார்ந்தவர் என்றும் இவரை தபால் அமைச்சர் இத்திணைக்களத்தில் வேலைக்கு அமைக்க உதவினர் என்றும் ஆகவே தொழிற்சங்க நடவடிக்கை தேவையில்லை என்றும் அவர்கள் கையை விரித்துவிட்டார்களாம் பாவம் அப்பாவித் தொழிலாளி அல்லலுறுகின்றார்!

# உடப்பு முதல் புத்தளம் வரை...

—1-ம் பக்கத் தொடர்

செயல் அதிபர் நாவலர் அ. அமிர்தலிங்கம், தமிழ் மகளிர்பேரவையின் பொதுச் செயலாளர் திருமதி மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம், தமிழ் இளைஞர் பேரவையின் இடைக்கால அமைப்பாளர் திரு. ஆ. ரகுபதிபாலசிறீதரன், தமிழ் இளைஞர்பேரவையின் பருத்தித்துறை தொகுதி அமைப்பாளர் திரு. கனக — மனோகரன், இஸ்லாமிய இணைப்புபேரவைத் தலைவர் டாக்டர் ஆ. உதுமாலெவ்வை, சுதந்திரன் ஆசிரியர் திரு. கோவை மகேசன் ஆகியோர் கலந்து கொண்டு தமிழர் விடுதலைக் [illegible]ட்டணியின் கொள்கைகளையும், தமிழ் இனத்தின் இன்றைய நிலையையும் எடுத்துவிளக்கினர்.

இக்கருத்தரங்குகளில் கலந்துகொள்வதற்காக புகைவண்டி மூலம், ஞாயிறு காலை சிலாபத்துக்கு தலைவர்கள் சென்றபோது, நீர்கொழும்பு தமிழ் இளைஞர் பேரவையினர் நீர்கொழும்பு புகையிரத நிலயத்தில் வைத்து அவர்களுக்கு குதூகல வரவேற்பளித்தனர்.

### உடப்பு

சிலாபத்திலிருந்து ஜீப் மூலம், உடப்பு எனும் அழகிய தனித் தமிழ்க் கிராமத்தை சென்றடைந்த கூட்டணித் தலைவர்கள், உடப்பு திரௌபதியம்மன் கோவிலில் விசேட வழிபாட்டில் ஈடுபட்ட பின்னர்; உடப்பு இந்து இளைஞர் மன்றத்தினர் ஏற்பாடு செய்திருந்த கருத்தரங்கில் கலந்து கொண்டு உரைநிகழ்த்தினர். இக்கருத்தரங்கிற்கு திரு. வீரவேலாயுதம் தலைமை தாங்கினார். உடப்பு மாவித்தியாலய அதிபர் திரு. சோமஸ்கந்தா நன்றியுரை நல்கினார். தலைவர்களுக்கு மதிய உணவை உடப்பு கிராம சபைத்தலைவர் திரு. சாமி அவர்களது தமது இல்லத்தில் அளித்து உபசரித்தார்.

### முந்தல்

இதன் பின்னர், உடப்பிலிருந்து புத்தளம் நோக்கிப் புறப்பட்டு சென்ற தலைவர்களை வழியில் முந்தல் தமிழ் பேசும் மக்கள் மாலைகள் சூட்டி, வெடிகள் கொழுத்தி ‘தமிழ் ஈழம் மலர்க’ எனும் சுலோகம் முழங்க குதூகலத்துடன் வரவேற்றதுடன், இளநீர் வழங்கி மகிழ்ந்தனர். முந்தலில் திரு. கனகரத்தினம் தலைமையில் நடந்த வரவேற்பில் தலைவர்கள் உரையாற்றிய பின்னர், திரு. அழகிரிசாமி நன்றி நவின்றார்.

### மதுரங்குளி

அதைத்தொடர்ந்து, தலைவர்கள் மதுரங்குளியை அடைந்தபோது, அங்கும் பெருந்திரளான முஸ்லிம் மக்களும் தமிழ் மக்களும் ஆர்வத்துடன் திரண்டு நின்று தலைவர்களை மலர் மாலைகள் சூட்டி வரவேற்ற காட்சி கண்கொள்ளாக்காட்சியாக இருந்தது. ஜனாப் எஹியா வரவேற்புரை நிகழ்த்தினர். அவர் தனது வரவேற்புரையில், அப்பகுதி வாழ்கின்ற தமிழ்பேசும் மக்களின் உரிமைகளைத் தட்டிப் பறித்திட பெரும்பான்மையினர்மேற்கொள்ளும் அநீதியான நியாயமற்ற நடவடிக்கைகளைத் தடுத்து நிறுத்த வேண்டிய சட்ட ஆலோசனைகளையும், உதவிகளையும வழங்குமாறு கூட்டணித் தலைவர்களை கேட்டுக்கொண்டார். பின்னர் திரு. அமிர்தலிங்கம் பேசுகையில், நிச்சயமாக தமிழர் விடுதலைக்கூட்டணி இக்கோரிக்கையை நிறைவேற்றி வைக்கும் என்று குறிப்பிட்டார். இவ் வரவேற்பு நிகழ்ச்சிக்கு டாக்டர் கிருஷ்ணபிள்ளை தலைமை தாங்கினர்.

### புத்தளம்

மதுரங்குளி நிகழ்ச்சிக்குப் பின்னர், புத்தளத்தையடைந்த தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர்களுக்கு ஜனாப் நிசார் அவர்களின் சிற்றுண்டி விருந்துபசாரம் அளிக்கப்பட்டது. ஜனாப் நிசாருக்கு சொந்தமான 3½ இலட்ச ரூபா பெறுமதி வாய்ந்த தம்பி மரிக்கார் ஆலை புத்தளம் கலவரத்தின் போது முற்றாகத் தீயூட்டப்பட்டது இங்கு குறிப்பிடத் தக்கது. இதன் பின்னர், புத்தளம் மாரியம்மன் கோவிலுக்கு விஜயம்செய்த தலைவர்கள், அங்கு நடைபெற்ற விசேட பிரார்த்தனையில் கலந்துகொண்டனர்.

இதன் பின்னர், புத்தளம் விளையாட்டரங் கத்திலுள்ள மண்டபத்தில் கருத்தரங்கு ஆரம்பமாகியது. இக்கருத்தரங்கில் பெருந்தொகையான தமிழ்பேசும் மக்கள் ஆர்வப்பெருக்குடன் கலந்து கொண்டார்கள். இக்கருத்தரங்கை புத்தளம் தமிழ் பேசும் இளைஞர் மன்றம் ஏற்பாடு செய்திருந்தது. கருத்தரங்குக்கு திரு. சேவியர் தலைமை தாங்கினர். இக் கருத்தரங்கில் கூட்டணி பிரமுகர்கள் அனைவரும் உரைநிகழ்த்தினர். இறுதியில் டாக்டர் இலியாஸ் நன்றி நவின்றார்.

உடப்பு முதல் புத்தளம் வரை அன்றைய தினம் பெரும் அரசியல் எழுச்சியையும் விழிப்புணர்ச்சியையும் காணக்கூடியதாயிருந்தது. தொடர்ந்தும் இப்பகுதிகளுக்கு கூட்டணித்தலைவர்கள் விஜயம் செய்யவே[illegible]மென அப்பகுதி மக்கள் ஆர்வமுடன் கேட்டுக்கொண்டனர்.



பருத்தித்துறை தமிழ் இளைஞர்பேரவையினரும் மகளிர் பேரவையினரும் தமிழினத்தின் நலன்வேண்டி பிரார்த்தனை செய்து காவடியும், கரகமுமெடுத்தபோது எடுத்த படம் இது.

# பருத்தித்துறை காவடி ஊர்வலத்தில் நெஞ்சை உருக்கும் காட்சிகள்!

தமிழின விடுதலைக்காக சிறையிலிருந்து வாடும் சகோதர சகோதரிகளின் விடுதலைவேண்டி, பருத்தித்துறை தமிழ் இளைஞர் பேரவை, மகளிர் பேரவையினர், சென்ற 24-10-76 ஞாயிற்றுக்கிழமை நடாத்திய காவடி பால் செம்பு வைபவத்தில் இடம்பெற்ற காட்சிகள்—நெஞ்சை உருக்கின. உதய சூரியன் கொடி ஓர் இளைஞனின் நெஞ்சில் ஊசிகள் மூலம் தைக்கப்பட்டிருந்தது. முன்னணியில் ஓர் சிறுவன் உதயசூரியன் கொடியை தாங்கிவர— இன்னுமோர் சிறுவன் “சாகும்போதும் தமிழ் படித்துச் சாகவேண்டும்” என்ற வாசகத்தையும் தாங்கி வந்தார்-பல்லாயிரக் கணக்கானோர் பங்குபற்றிய இதில் 5 இளைஞர்கள் செடில் காவடியும், 9 சகோதரிகள் பால் செம்பும் எடுத்தார்கள். பல உண்ணாவிரதங்களில் பங்குபற்றிய “சாருமதி” செல்வநாயகம் என்ற ஆறுவயது குழந்தையும் பால் செம்பு எடுத்திருந்தது. காவடிகள் பவணிவந்த வீதியெங்கும் பூரண குடும்பங்கள் வைத்து வரவேற்பழிக்கப்பட்டது. மருதடி வைரவர் ஆலயத்தில் ஆரம்பமாகிய நிகழ்ச்சிகள்— சிவன் கோவிலில் முடிவுற்றபின்— கருத்தரங்குஇடம்பெற்றது. [illegible]கூட்டத்தில் திரு. கனக மனோகரன், திருமதி யோ. வேதநாயகம் (சிறையில் உள்ள மங்கையற்கரசியின் தாய்) திரு. சிவசுப்பிரமணியம் செல்வி கந்தசாமி அழகம்மா, (மகளிர் பேரவை தலைவி)— திரு. ஈழவேந்தன் ஆகியோர் உரையாற்றினர்.

கருத்தரங்கு இளைஞர் பேரவை நகரக் கிளைத் தலைவர் திரு. ந. சிவசுப்பிரமணியம் தலைமையில் நடைபெற்றது.

ஊர்வலத்தில் பரு. நா. உ. திரு. க. துரைரத்தினம் அவர்கள் கலந்துகொண்டார்.

இப்பத்திரிகை சிலோன் நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் கொழும்பு-12 பண்டாரநாயகா வீதி, 194 ஏ, இலக்கத்தில் 1976ம் வருடம் நவம்பர் மாதம் 3-ம் திகதி புதன்கிழமை அச்சிட்டு பிரசுரிக்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org